
இடைவெளியைப் பின்பற்றுங்கள்

## கடைகளும் உணவும்

### அரும்பொருளக கடை

செவ்வாய் – வெள்ளி: காலை 9.30 முதல் மாலை 5.30 வரை
பொது விடுமுறை நாட்கள் தவிர்த்து திங்கட்கிழமைகளில் மூடப்பட்டிருக்கும்.

அரும்பொருளகத்தின் திரட்டை மையப்படுத்தி சிறப்பாக வடிவமைக்கப்பட்ட தயாரிப்புகளையும் அரும்பொருளக வெளியீடுகளையும் வாங்கிச் செல்லுங்கள். எங்கள் கடையில் வாங்கும் ஒவ்வொரு பொருளும், அரும்பொருளகத்திற்கும் கண்காட்சிகளுக்கும் ஆதரவளிக்க உதவுகிறது.



### த பார்க் கஃபே

தினமும் காலை 11.30 மணியிலிருந்து நள்ளிரவு 12 மணி வரை திறந்திருக்கும்.



2002ஆம் ஆண்டு திறக்கப்பட்ட த பார்க் கஃபே நியாயமான விலையில் வழங்கும் சுவையான மேற்கத்திய, ஆசிய உணவு வகைகள், நட்பார்ந்த சேவை, இதமான சூழல் ஆகியவை வாடிக்கையாளர்களின் விசுவாசத்தைப் பெற்றுத் தந்துள்ளது. குடும்பங்களும் வேலை செய்யும் இளவயதினரும் உணவகத்தின் நட்பார்ந்த சுற்றுப்புறத்தைத் தேடி வருகின்றனர். சாங்கி தேவாலய அரும்பொருளகத்திற்கு வருகை தருவோரும், சிங்கப்பூரின் நெஞ்சை உருக்கும் போர்க்காலக் காட்சிப் பொருட்களையும் கதைகளையும் பார்வையிட்ட பிறகு சிந்தித்துப் பிரதிபலிக்க உணவகத்தை நாடிச் செல்கின்றனர்.

## எங்களுக்கு ஆதரவு கொடுங்கள்

ஜப்பானிய ஆக்கிரமிப்பின்போது சாங்கி சிறைச்சாலை முகாமில் அடைக்கப்பட்டிருந்த போர்க் கைதிகள், பொதுமக்கள் ஆகியோரின் கதைகள் என்றென்றும் நம் நினைவில் நிற்க, சாங்கி தேவாலய அரும்பொருளகத்திற்கு ஆதரவு கொடுங்கள். சவால்மிகுந்த சூழ்நிலைகளிலும் மீள்திறனுடன் நீடித்திருக்க எதிர்காலத் தலைமுறைகளுக்கு ஊக்கமூட்டும் இந்தக் கதைகளைப் பாதுகாக்கவும் படைக்கவும் உங்கள் நன்கொடை துணை புரியும்.

நன்கொடை வழங்க மேலே உள்ள QR குறியீட்டை வருடி giving.sg இணையத்தளத்திற்குச் செல்லுங்கள் அல்லது கீழே உள்ள QR குறியீட்டை வருடி உங்களது கைப்பேசி வங்கிச் செயலி வாயிலாக நேரடியாக நன்கொடை வழங்குங்கள்.

செயல் 1: உங்களது கைப்பேசி வங்கிச் செயலியில் உட்பதிவு செய்யுங்கள்.

செயல் 2: உங்களது கைப்பேசி வங்கிச் செயலியைப் பயன்படுத்தி PayNow QR குறியீட்டை வருடுங்கள்.

செயல் 3: நீங்கள் வழங்க விரும்பும் தொகையை உள்ளிடுங்கள். மேற்கொள் பகுதியில் CCM எனக் குறிப்பிட்டு, உறுதிப்படுத்துங்கள்.




## திறந்திருக்கும் நேரம்

காலை 9.30 முதல் மாலை 5.30 வரை (செவ்வாய் முதல் ஞாயிறு வரை)
பொது விடுமுறை நாட்களை தவிர்த்து ஒவ்வொரு திங்கட்கிழமையும் மூடப்பட்டிருக்கும்.
கடைசி நுழைவு மாலை 5 மணிக்கு.

## வழிகாட்டிச் சுற்றுலாக்கள்

முதலில் வருபவர்களுக்கே முன்னுரிமை என்ற அடிப்படையில், அதிகபட்சம் 15 நபர்களுக்கு, இலவச வழிகாட்டுதலுடன் சுற்றுப்பயணங்கள் வழங்கப்படும்.
மேலும் தகவலுக்கு எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும்.

## தொடர்பு

Changi_Museum@nhb.gov.sg

**நாங்கள் இணையத்திலும் இருக்கிறோம்!**

www.changichapelmuseum.gov.sg
changichapelmuseum
changichapelmuseum

நிர்வகிப்பாளர்
National Museum of Singapore
National Heritage Board

ஆதரவாளர்
Ministry of Culture, Community and Youth



சாங்கி அரண்

## சாங்கி தேவாலய அரும்பொருளகம்

சாங்கி தேவாலய அரும்பொருளகம் ஜப்பானியர் ஆக்கிரமிப்பின்போது சாங்கி சிறைச்சாலை முகாமில் அடைக்கப்பட்ட போர்க் கைதிகள், பொதுமக்கள் ஆகியோரின் கதைகளை எடுத்துரைக்கிறது. சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் நிர்வாகத்தின்கீழ், அண்மையில் புதுப்பிக்கப்பட்ட சாங்கி தேவாலய அரும்பொருளகத்தில் புத்தம்புதிய உள்ளடக்கங்களும் கலைப்பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. முன்னாள் கைதிகளின் குடும்பத்தாரிடமிருந்து சேகரிக்கப்பட்ட கதைகளும் தனிப்பட்ட பொருட்களும் அவற்றுள் அடங்கும். அவை அனைத்தும் பார்வையாளர்களை ஆத்மார்த்தமான முறையில் ஈடுபடுத்த படைக்கப்பட்டுள்ளன. நினைவுகளையும் எண்ணப் பிரதிபலிப்பையும் மையமாகக் கொண்ட காட்சிப்படைப்பு, கைதிகள் பட்ட துன்பத்தை மட்டுமன்றி, இன்னல்களுக்கு இடையில் அவர்கள் வெளிக்காட்டிய துணிச்சலையும் மீள்திறனையும் ஆராய வருகையாளர்களைத் தூண்டுகிறது.

சாங்கி தேவாலய அரும்பொருளகத்தை அனுபவிப்பதோடு அதன் பாரம்பரியத்தால் ஈர்க்கப்படுங்கள்.

## பொது நிகழ்ச்சிகள்


பிப்ரவரி, செப்டம்பர் மாதங்களில், அரும்பொருளக அதிகாரி நடத்தும் சுற்றுலாக்கள், உரைகள் உள்ளிட்ட சிறப்பு நிகழ்ச்சிகளை எதிர்பாருங்கள். இரண்டாம் உலகப் போரின்போது சிங்கப்பூரில் நடந்த முக்கிய நிகழ்வுகளின் நினைவாக அந்நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

## பள்ளி வருகைகள்

சாங்கி தேவாலய அரும்பொருளகத்தை ஆராய உங்களது மாணவர்களை அழைத்து வாருங்கள்!

முன்னாள் கைதிகளின் கதைகள், உடைமைகள் ஆகியவற்றின் மூலம், ஜப்பானிய ஆக்கிரமிப்பின்போது சாங்கி சிறைச்சாலை முகாமில் அடைக்கப்பட்ட போர்க் கைதிகளும் பொதுமக்களும் அனுபவித்த இன்னல்கள், இக்கட்டான காலத்திலும் துணிச்சலும் மீள்திறனும் வெளிப்பட்ட கதைகள் ஆகியன பற்றி மாணவர்கள் மேலும் தெரிந்து கொள்ளலாம்.

முன்பதிவு செய்ய, வருகை பற்றிய விவரங்களுடன் NHB_CCMBC_Programmes@nhb.gov.sg என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள். உங்கள் வருகைக்கு உதவ கற்பித்தல் வளங்கள் உள்ளன.





## கண்காட்சி விவரப்பட்டியல்

சாங்கி தேவாலய அரும்பொருளகத்தின் கண்காட்சி விவரப்பட்டியல், காட்சிக்கூடத்தில் உள்ள எட்டு பகுதிகளுக்கும் விளக்கவுரையுடன் வழிகாட்டும். கண்காட்சி தொகுப்பாளர்களின் கட்டுரைகள் மற்றும் முக்கிய உட்கருத்துகள், ஒவ்வொரு பகுதியின் தனிப்பட்ட கதைகள் மற்றும் சிறப்புக் கலைப்பொருட்கள் ஆகியன விவரப்பட்டியலில் இடம்பெற்றுள்ளன. சிங்கப்பூரை ஜப்பானிய ராணுவம் ஆக்கிரமித்திருந்தபோது சாங்கி சிறைச்சாலை முகாமில் அடைக்கப்பட்ட போர்க் கைதிகள், பொதுமக்கள் ஆகியோரின் அனுபவங்களை விவரப்பட்டியல் எடுத்துச்சொல்கிறது.


துன்பத்தில் வெளிப்பட்ட படைப்பாற்றல்


விடுதலை


விட்டுச்செல்லப்பட்ட நினைவுகள்




1. சாங்கி அரண்
2. வீழ்ந்த அரண்
3. கைதிகள்
4. போர்க் கைதிகளின் வாழ்க்கை
5. துன்பத்திலும் மீள்திறன்
6. துன்பத்தில் வெளிப்பட்ட படைப்பாற்றல்
7. விடுதலை
8. விட்டுச்செல்லப்பட்ட நினைவுகள்

## அறிமுகம்

1942ல், ஜப்பானிய ஆக்கிரமிபின்போது , சாங்கி சிறைச்சாலை முகாமில் ஆயிரக்கணக்கான போர்க் கைதிகளும் பொதுமக்களும் அடைக்கப்பட்டனர். அடுத்த மூன்றரை ஆண்டுகளுக்கு அங்கேயே சிறைவாசம் அனுபவித்த அவர்கள், உயிர் பிழைத்திருக்க நூதனமான அறிவுக்கூர்மையையும் மன பலத்தையும் சார்ந்திருந்தனர். கைதிகளின் அன்றாட வாழ்க்கை, சவால்களைச் சமாளிக்க அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள், சிறையிலிருத்து விடுதலை ஆகியவற்றை ஆராயும் எட்டு பகுதிகள் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.



## சாங்கி தேவாலயம்

இந்தத் தேவாலயம், செயின்ட் ஜார்ஜஸ் தேவாலயத்தைப் போல வடிவமைக்கப்பட்டுள்ளது. போர்க் கைதிகள் சிறைவாசத்தின்போது சாங்கியில் கட்டிய பற்பல தேவாலயங்களில் இதுவும் ஒன்று. இதனைத் தொடங்கியவர் ரெவரண்ட் எரிக் கார்டிங்லி. போரின் மீதிக்காலம் முழுவதிலும் தேவாலயத்திற்கு அவர் பொறுப்பேற்றருந்தார். தாய்லாந்து-பர்மா ரயில்பாதை கட்டுமானப் பணிக்காகப் போர்க் கைதிகள் அனுபப்பட்டபோது, காஞ்சனாபுரியில் இதே போன்ற இரண்டாவது தேவாலயம் கட்டப்பட்டது. அங்கிருந்து திரும்பிவந்த போர்க் கைதிகள், சாங்கி சிறைச்சாலையில் இதே போன்ற மேலும் இரண்டு தேவாலயங்களைக் கட்டினார்கள். எத்தனை வடிவங்கள் இருந்தாலும், தேவாலயம் அதன் திருச்சபைக்கு வந்த அனைவருக்கும் நம்பிக்கையும் ஆறுதலும் அளித்தது.

### 1 சாங்கி அரண்

இந்தப் பகுதி, சாங்கியின் வரலாற்றை அறிமுகப்படுத்துகிறது. சாங்கி 19ஆம் நூற்றாண்டில் சதுப்புநிலங்களும் ஊசியிலைக் காடுகளும் நிறைந்த இடமாக இருந்தது. 1920களில், சிங்கப்பூரைத் தாக்குதலிலிருந்து பாதுகாப்பதற்காக பிரிட்டிஷார் இங்கு படைத்தளங்களும் பாளையங்களும் கட்டத் தொடங்கியபோது , சாங்கியின் அமைதியான சுற்றுச்சூழல் மாறத் தொடங்கியது.

### 2 வீழ்ந்த அரண்

ஜப்பானியர் 1941 டிசம்பர் மாதம் மலாயாவில் படையெடுப்பு நடத்திய மூன்று மாதங்களுக்குள் சிங்கப்பூர் வீழ்ந்தது. இந்தப் பகுதியில் சிங்கப்பூரின் வீழ்ச்சியும், அதற்குப் பிறகு வீரர்களும் பொதுமக்களும் எதிர்நோக்கிய கதியும் ஆராயப்படுகின்றன.

### 3 கைதிகள்

பரந்த சிறைச்சாலை முகாமாக மாற்றப்பட்ட சாங்கிக்குக் கிட்டத்தட்ட 48,000 வீரர்களும் பொதுமக்களும் நடைப்பயணத்தில் இட்டுச் செல்லப்பட்டனர். சாங்கியில் அடைக்கப்பட்ட ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் ஆகியோரின் கதைகளை இப்பகுதியில் தெரிந்து கொள்ளுங்கள்.

### 4 போர்க் கைதிகளின் வாழ்க்கை

சாங்கி சிறைச்சாலையின் ஓர் அறையைப் போலவே வடிவைமக்கப்பட்டிருக்கும் இப்பகுதியில், சிறைவாசம் அனுபவித்தவர்களின் அன்றாட வாழ்க்கை பற்றிய உரையாடல்களைக் கேளுங்கள்.

### 5 துன்பத்திலும் மீள்திறன்

கைதிகள் இக்கட்டான சூழ்நிலையிலும் நூதனமான உத்திகளைக் கையாண்டு அறிவுக்கூர்மையுடன் சவால்களைக் சமாளித்தனர். இந்தப் பகுதியில், கைதிகள் அனுபவித்த சிரமங்களையும், அவற்றுக்கு அவர்கள் எவ்வாறு தீர்வு கண்டனர் என்பதையும் காணலாம்.

### 6 துன்பத்தில் வெளிப்பட்ட படைப்பாற்றல்

படைப்பாற்றலின் வெளிப்பாடு கைதிகளுக்கு முக்கியமான ஒன்றாக இருந்தது. அவர்கள் எழுதுவதற்கும், வரைவதற்கும், வாசிப்பதற்கும், கைவினைகள் செய்வதற்கும், விளையாடுவதற்கும், கலைநிகழ்ச்சிகளும் நாடகங்களும் அரங்கேற்றுவதற்கும் வழிகளைக் கண்டறிந்தனர். அவர்கள் ஊக்கத்தைக் கைவிடாமல் எவ்வாறு தாக்குப்பிடித்தனர் என்பதை இப்பகுதியில் தெரிந்து கொள்ளுங்கள்.

### 7 விடுதலை

ஜப்பானியர்கள் 15 ஆகஸ்ட் 1945 அன்று சரணடைந்தபோது, சிங்கப்பூரில் மூன்றரை ஆண்டுகால ஆக்கிரமிப்பு முடிவுக்கு வந்தது. விடுதலையானபோது கைதிகளின் மனநிலை எப்படி இருந்தது என்பதையும், போருக்குப் பிறகு என்ன நடந்தது என்பதையும் இப்பகுதி காட்டுகிறது.

### 8 விட்டுச்செல்லப்பட்ட நினைவுகள்


சாங்கி முகாமின் நினைவுகள் இன்றும் அழியா வரலாறாக நிலைத்திருக்கின்றன. இப்பகுதியில், கைதிகளின் பெயர்களையும் கதைகளையும் தேடிப் பார்த்து, சிறைவாசத்தின்போது அவர்கள் எவ்வாறு உயிர் பிழைத்திருந்தார்கள் என்பதை நினைவில் கொள்வதற்காகத் தயாரிக்கப்பட்ட சில கலைப்பொருட்களைப் பார்வையிடுங்கள்.

## இன்னும் பலவற்றுக்கு சாட்பாட்

சாங்கி தேவாலய அரும்பொருளகத்தின் சாட்பாட் (Chatbot) சேவையுடன், உங்கள் கைப்பேசியில் பல்வேறு மொழிகளில் கண்காட்சி விளக்கவரிகைளயும் பிரத்யேகமான கேட்பொலி சுற்றுலாக்களையும் அனுபவித்திடுங்கள்! சாங்கியில் அடைபட்ட ஒரு வீரரின் கதையைக் கேட்டு, காட்சிக்கூடங்களை ஆராய்ந்திடுங்கள். நீங்கள் நேரடியாக அல்லது மெய்நிகராகச் செல்லக்கூடிய அருகிலுள்ள இரண்டாம் உலகப் போர் தொடர்பான இடங்கைளத் தெரிந்து கொள்ளுங்கள். இடது புறத்தில் உள்ள QR குறியீட்டை வருடியதும் சாட்பாட்-ஐ தொடங்குங்கள்!

## பொதுவான தகவல்கள்

எங்கள் வருகையாளர்கள், அலுவலர்கள் ஆகியோரின் நலனில் எங்களுக்கு எப்போதும் அக்கறை உண்டு. அனைவருக்கும் இனிய அனுபவத்தை வழங்கவும், நமது தேசியத் திரட்டைப் பாதுகாக்கவும், தயவுசெய்து பின்வரும் விதிமுறைகளைப் பின்பற்றுங்கள்:




சாங்கி தேவாலய அரும்பொருளகம் அனைவருக்குமான ஒரு மகிழ்ச்சியூட்டும் அரும்பொருளக அனுபவத்தை வழங்கக் கடப்பாடு கொண்டுள்ளது. **அனைவருக்கும் உகந்த எங்கள் வசதிகளையும் சேவைகளையும்** பற்றி மேலும் தெரிந்துகொள்ள, எங்கள் வருகையாளர் சேவை அதிகாரியிடம் பேசுங்கள்*!

** எல்லாக் காட்சிக் கூடங்களும் வசதிகளும் சக்கர நாற்காலிகளிலும் தள்ளு வண்டிகளிலும் செல்லக்கூடியவை . எங்கள் வருகையாளர் சேவை முகப்பில் கையால் இயக்கும் சக்கர நாற்காலிகள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் உள்ளன. கண்காட்சி விளக்க வாசகங்கள் பெரிய எழுத்துக்களில் ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ், ஜப்பானிய மொழிகளில் எங்கள் நடமாடும் ஊடாடும் மேடையிலும் உள்ளன.*

*விவரங்கள் அனைத்தும் அச்சிடும் சமயத்தில் சரியானவை. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த வெளியீட்டில் உள்ள எதனையும் முழுமையாகவோ அல்லது அதில் ஒரு பகுதியையோ, வெளியீட்டாளரான சாங்கி தேவாலய அரும்பொருளகத்தின் எழுத்துபூர்வ அனுமதியின்றி மறுபிரசுரிக்கக்கூடாது. © பதிப்புரிமை 2023.*